[23rd March 1961

பட்டுள்ளது. மீதித் தொகையைக் கணக்கரின் பூர்வீக சொத்திலிருந்து திருப்பிப் பெற தஞ்சாவூர் கலெக்டர் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

SRI A. VEDARATHNAM : இந்த நிதியைக் கையாள்கிறவர்கள் போதுமான நிதி இல்லாதவர்களாக இருப்பதனால் இந்த நிலைமை ஏற்பட சந்தர்ப்பம் வருகிறது ; ஆகவே நிதியைக் கையாள்பவர்களிடமிருந்து தகுந்த செக்யூரிடி வாங்கி, அப்படி உள்ளவர்களை ப்ளாக்குகளில் நியமிக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவசியமாக இருக்கக் கூடிய கேசுகளில் ஜாமீன் தொகை வாங்கப்படுகிறது. இந்த இடத்தில் பெற்றார்களா என்ற விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

Co-operative Hand-pounded Rice Industry Society in North Madras (misappropriation)

*1021 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட சென்னையிலுள்ள கூட்டுறவு கைக்குத்தல் அரிசி தொழில் சங்கத்தில் 6,000 ரூபாய்க்கு மேல் மோசடி ஏற்பட்டிருப்பது உண்மையா ?

(இ) அதற்குப் பொறுப்பாளிகளின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No Sir, but a sum of R.s 2,425·59 has not been properly accounted for in the Cash Book of the North Madras Handpounding Rice Workers' Co-operative Society, Limited.

(b) An enquiry is being conducted into the matter.

SRI V. K. KOTHANDARAMAN : எவ்வளவு காலமாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது ? விசாரணை முடிய இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எவ்வளவு காலமாக என்ற விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை ; எப்பொழுது முடியும் என்று சொல்ல முடியாது.

SRI V. SUBBIAH : கூட்டுறவு இலாகாவில் பரவலாக இம் மாதிரி எல்லா செக்‌ஷன்களிலும், ஸ்டோர்ஸ், மார்கெடிங் சொசைடிகள் முதலியவைகளில் இந்தக் குறை ஜாஸ்தியாக இருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன ? அப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது கூட்டுறவு இலாகாவில் மட்டுமல்ல, மற்ற சர்க்கார் இலாகாக்களிலும், தனிப்பட்டோர் ஸ்தாபனங்களிலும் ஏற்படுகிறது; வருஷா வருஷம் ஆடிட் செய்யப்படுகிறது. அப்படி ஆடிட் செய்யப் பட்டபோது தான் இந்தப் பணக் குறைவு கண்டுபிடிக்கப் பட்டது. அதன் பேரில் விசாரணை நடத்தப்பட்டது, நடவடிக்கை எடுக்கப் பட்டது.

Actors and Technicians (award of prizes)

* 1022 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have any proposal to award prizes for the best actors and technicians; and

(b) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No, Sir.

(b) Does not arise.

23rd March 1961]

SRI N. K. PALANISAMI : May I know whether this Government have been consulted by the Central Government whenever they gave prizes or awards to film actors and actresses belonging to this State?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not have with me just now the details of the procedure followed. The question is with reference to this Government, viz., whether we have any intention of giving prizes and I said, 'No'. If the hon. Member wants information about any other thing, he may put a separate question.

Assembly and Parliamentary Elections (Reserved Seats)

* 1023 *Q.*—SRI T. S. RAMASWAMY : Will the Hon the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Central Government have communicated to the State Government regarding the abolition of the reserved seats in the Assembly and Parliamentary Elections and replacing them by Reserved Constituencies;

(*b*) if so, the nature of the communication; and

(*c*) the nature of reply sent by the State Government, if any?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Election Commission has invited suggestions for the splitting up of the two-member Parliamentary and Assembly Constituencies in this State.

(*c*) A reply will be sent to the Commission as soon as details have been examined.

I may add, Sir, that since then this reply has been sent.

SRI V. SUBBIAH : மேல் ஜாதியினர் வாக்குரிமை தன் இனத்திற்கு இல்லை என்ற துவேஷ எண்ணத்தின் பலனை உணர்ந்து செயல்படுகின்றனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப் பற்றியெல்லாம் ஆலோசனை செய்து, பார்லிமெண்ட் இந்த சட்டத்தைச் செய்திருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்லும் கருத்தையும் பரிசிலனை செய்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

SRI P. G. MANICKAM : இரட்டைத் தொகுதிகளை ஒற்றைத் தொகுதிகளாக்கி, வோட்டர்கள் ஜாபிதா எல்லாம் எவ்வளவு காலத்தில் முடிவு அடையும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தேர்தலுக்குள் முடியும்.

SRI C. NATARAJAN : தொகுதியைப் பிரிப்பது பற்றி நம் சபையில் விவாதிக்க ஆலோசனை உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது சட்டமாகிவிட்டது ; ஆலோசனை செய்வதில் என்ன பலன் ?

SRI C. NATARAJAN : இந்த ஆலோசனை டேரில் வரும் கருத்துக்களையும் வைத்து ஏற்படக்கூடிய தகராறுகளைத் தடுக்க உதவியாகச் செய்யமுடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சட்டம் வந்தாகிவிட்டது ; இதில் என்ன சிக்கல் வரும் என்று தெரியவில்லை. அப்படி ஏதாவது சிக்கல் வரும் காலத்தில் ஆலோசனை செய்யலாம்.